முக்கிய வார்த்தைகள்:
*கல்வியறிவு*
*நெறிமுறைகள் / பண்பு*
*நேர்மை*
*பணிவு*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**17 ஏப்ரல் 2026 / 28 ஷவ்வால் ஹிஜிரி 1447**

# இஸ்லாத்தின் பாரம்பரியக் கல்வியறிவிலிருந்து பெற வேண்டிய பாடங்கள்

ٱلْحَمْدُ لِلّٰهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللّٰهُ. أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا ٱللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. أُوْصِيْ نَفْسِيْ وَإِيَّاكُمْ بِتَقْوَى اللهِ عَزَّ وَجَلّ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது ”தக்வா” [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்போமாக! அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக! நாம் இன்று ஏற்படுத்திக் கொள்ளும் ”தக்வா” வானது, மறுமையில் அல்லாஹ்வின் முன் நாம் நிற்கும் போது, அவனது திருப்தியை நாம் பெறுவதற்குக் காரணமாக அமையட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

நாம் வாழ்ந்து வரும் தற்காலத்தில், அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களின் முன்னேற்றங்களின் காரணமாக பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அம்மாற்றங்கள், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மிக வேகமாக விரிவடைந்து வருகின்றன. அவை நமது வாழ்க்கைமுறை யையும், மார்க்கப் பற்றையும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத அளவுக்கு மாற்றியுள்ளன. சகோதரர்களே, இம்மாதிரியான மாற்றங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும். மேலும் இம்முன்னேற்றங் களின் காரணமாக, மார்க்க விஷயங்களில் பல சிக்கலான சவால்கள் அதிகரிக்கும். அச்சவால்கள், உலகில் காணப்படும் கல்வியறிவுக்குச் சமமான, மேம்பட்ட **கல்வியறிவு** நம்மிடம் காணப்பட வேண்டுமென வலியுறுத்துவதாக உள்ளன.

தற்காலத்தின் சிக்கலான சவால்களை எதிர்கொண்டு, நேர்வழியைப் பெறுவதற்கு இஸ்லாமியப் பாரம்பரியக் **கல்வியறிவில்** சிந்தனை செய்வது அவசியமாகும். இஸ்லாமியப் பாரம்பரியக் கல்வியறிவானது, *அல்-கவாரிஜிமி, இப்னு சீனா, அல்-பைரூனி* போன்ற பல மிகச் சிறந்த மேதைகளை உருவாக்கியது; இவர்கள் கணிதம், மருத்துவம், வான சாஸ்திரக் கலை போன்ற பல துறைகளில் பங்காற்றியுள்ளார்கள். அப்பங்காற்றுதல்கள், இன்று வரை தொடர்ந்து மனிதகுலத்துக்குப் பயனளித்து வருகின்றன. நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள அவர்களின் பங்காற்றுதல்கள், இம்மேன்மையை அவர்கள் எப்படி அடைந்தார்கள் என நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

இஸ்லாமியப் பாரம்பரியக் **கல்வியறிவிலிருந்தும்**, அது உருவாக்கிய அறிஞர்களிடமிருந்தும் நாம் எண்ணற்ற பாடங்களைப் பெற முடியும். அப்பாடங்களில் மூன்று முக்கியமானப் பாடங்களில் இன்று நாம் கவனம் செலுத்த இருக்கின்றோம்:

**முதலாவதாக: கல்வியறிவைத் தேடுவதானது, நம்மை ஆற்றல்மிக்க வர்களாக உருவாக்குகிறது**

**கல்வியறிவானது**, சவால்மிக்க சூழலில் வாழ்வதற்குத் தேவையான அறிவாற்றல் மற்றும் ஞானத்தின் மூலம் நம்மைத் தயார்படுத்துகிறது. தற்காலத்தில் ஏற்பட்டுள்ள புதிய கண்டுபிடிப்புகள், மார்க்கத்தின் குறிப்பிட்ட சில விஷயங்களில் நமது சிந்தனைகள் மற்றும் நிலைப்பாடுகளுக்கு சவால்களாக அமைந்துள்ளன. எனவேதான், சரியானக் கல்வியறிவைப் பெறுவது "ஃபர்ளு ஐய்ன்" ஆக ஆகியுள்ளது. அதாவது, தற்காலத்தில் வாழும் நம்மில் ஒவ்வொருவருக்கும் மார்க்கக் கடமையாக ஆகியுள்ளது.

இச்செய்தி, குறிப்பாக, **கல்வியறிவை** ஆக்கப்பூர்வமாகத் தேடுவதற்கான ஆற்றலையும் ஊக்கத்தையும் பெற்றுள்ள இளைஞர்களுக்கு மிகவும் அவசியமாகும். அதே சமயம், இளமைக்கால உத்வேகம் குறைந்திருக்கக் கூடியவர்களுக்கு, ஆற்றலும் ஊக்கமும் மங்கலாக இருக்கக் கூடும் என்றிருந்த போதிலும், முயற்சி செய்வதற்கு இன்னும் அவர்களுக்குக் காலங்கள் உள்ளன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-முஜாதலா" எனும் அத்தியாயத்தின் 11-வது வசனத்தில் கூறுகிறான்:
"அன்றியும், உங்களில் ஈமான் [ஓரிறை நம்பிக்கைக்] கொண்டவர்களுக்கும், **கல்வி ஞானம்** அளிக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான்; அல்லாஹ்வோ நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்"

எனவே, இளமைக்கால உத்வேகம் குறைந்திருப்பவர்களுக்கும் **கல்வியைத்** தேடுவதற்கான வாய்ப்பு உள்ளது. அவர்களும் கல்வியைத் தேட முயற்சிக்கட்டும்; அதன் மூலம் அவர்கள் தமது மார்க்கத்தை நன்கு அறிந்து, செயல்படும் ஆற்றலைப் பெறுவார்கள்; அவர்களின் அந்தஸ்தும் உயரும்; இன்ஷாஅல்லாஹ்.

**இரண்டாவதாக: கல்வியறிவானது, நீதி நெறிமுறைகள், நேர்மை மற்றும் பணிவை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்**

**கல்வியறிவும்** நற்குணமும் இணைந்து செல்ல வேண்டும் என இஸ்லாம் கூறுகிறது. அதிக அளவில் கல்வியறிவைக் கற்றுக் கொண்டால் மட்டும் போதுமாகாது. உண்மையானக் **கல்வியறிவானது,** நமது **நீதி நெறிமுறைகளை** வடிவமைப்பதாகவும், நமது செயல்பாட்டை உடன்பாடானதாக மாற்றக் கூடியதாகவும் இருக்கும். மற்றவர்களை எப்படி வழி நடத்த வேண்டுமென வழிகாட்டக் கூடியதாகவும் இருக்கும்.

மேலும், கல்வியறிவு **நேர்மையுடன்** இணைக்கப்பட்டிருக்க வேண்டும்; நாம் செய்யும் செயல் சரியானது தான் என அறிந்து செய்ய வேண்டும்; மற்றவர்களைக் கவர்வதற்காகச் செய்யக் கூடாது; முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காகவே செய்ய வேண்டும். **கல்வியறிவும் நேர்மையும்** இணைந்திருக்கும் போது, நாம் உண்மையாகவே வளர்ச்சியை நோக்கிச் செல்பவர்களாக ஆகுவோம்.

கல்வியறிவில் மேற்கண்ட மதிப்பீடுகள் காணப்படவில்லையெனில், **அக்கல்வியறிவு** தனது நோக்கத்தை இழந்து விடுவதோடு, சிலவேளைகளில் அது தீங்கு தருவதாகவும் ஆகி விடும். **கல்வியறிவில் நேர்மையும் பணிவும்** காணப்படவில்லையெனில், அது நம்மை கர்வம் மற்றும் சுயநலத்தின் பால் அழைத்துச் செல்லும்; சுயநலம் மற்றும் சுயசெயல் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு, செய்திகளைத் தவறாகப் பயன்படுத்தத் தூண்டும்.

குறிப்பாக, **கல்வியறிவு** நமக்குப் பண வசதிகள் முதற்கொண்டு, உலகியல் நன்மைகளை ஏற்படுத்தினாலும், அவற்றை நாம் இரண்டாந்தர, துணை நன்மைகளாகவேக் கருத வேண்டும். கல்வியறிவின் மூலம் உலகியல் நன்மைகளையேக் குறிக்கோளாகக் கொள்ளப்பட்டால், அவை தவறான நோக்கங்களையேப் பிரதிபலிப்பதுடன், **நெறிமுறைகளைப்** புறக்கணிப்ப தாகவும் ஆகி விடும். மேலும் வழிகாட்டும் மூலங்களாகக் கருதப்பட்டவையெல்லாம் குழப்பம் மற்றும் பிரிவினையின் காரணிகளாக மாறி விடும். எனவே தான், இஸ்லாம் **கல்வியறிவை** "கஷ்யா" வுடன்

இணைக்கின்றது. அதாவது, அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் மற்றும் அவன் மீதான பயபக்தியுடன் இணைக்கின்றது.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "ஃபாதிர்" எனும் அத்தியாயத்தின் 28-வது வசனத்தில் கூறுகிறான்:

وَمِنَ ٱلنَّاسِ وَٱلدَّوَآبِّ وَٱلْأَنْعَٰمِ مُخْتَلِفٌ أَلْوَٰنُهُۥ كَذَٰلِكَ ۗ إِنَّمَا يَخْشَى ٱللَّهَ مِنْ عِبَادِهِ ٱلْعُلَمَٰٓؤُا۟ ۗ إِنَّ ٱللَّهَ عَزِيزٌ غَفُورٌ ﴿٢٨﴾

பொருள்: "இவ்வாறே மனிதர்களிலும் ஊர்வனவற்றிலும் கால் நடைகளிலும் பல நிறங்கள் இருக்கின்றன; நிச்சயமாக அல்லாஹ்வின் அடியார்களில் அவனுக்கு அஞ்சுவோரெல்லாம் ஆலிம்கள் **[அறிஞர்கள்]** தாம். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவன்; மிக மன்னிப்பவன்"

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே**!

தற்போது ஓதப்பட்ட வசனமாகிறது, கல்விகற்றல் எப்போதும் அல்லாஹ்வின் சிந்தனையையும், அல்லாஹ்வுக்காகவே கற்க வேண்டுமென்ற **நேர்மையான** எண்ணத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென அழைப்பு விடுக்கின்றது. கடந்த கால அறிஞர்கள் இதனையே பிரதிபலிப்பவர்களாக இருந்தார்கள். அவர்களின் கல்விகற்றல் உச்சகட்டமான **நேர்மை**, **பணிவு**, அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் மற்றும் அவன் மீதான பக்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சமுதாயத்தின் விஷயத்தில் அவர்கள் உறுதியான பொறுப்புணர்வுடன் காணப்பட்டார்கள். அவர்கள் அந்தஸ்த்துகளைப் பெற வேண்டுமென்பதற்காக **கல்வி** கற்கவில்லை; மாறாக, அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற வேண்டும்; மற்றவர்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்பதற்காகவே கல்வி கற்றார்கள். கல்வி கற்பதில் அவர்களின் இவ்விதமான சமநிலையானப் போக்கின் காரணமாக, **அக்கல்வி**

அவர்களுக்கு நீடித்த தாக்கத்தையும், "பரகத்" எனும் அருள்களையும் ஏற்படுத்தியது.

எனவே, நாம் **கல்வி** கற்கும் போது, அது எவ்வாறு நமது **நடத்தையைச்** செம்மைப்படுத்துகிறது, அல்லாஹ்வுடனான நமது உறவைப் பலப்படுத்துகிறது என்பதைப் பொருத்து அதன் உண்மையான மதிப்பு அமைகிறது. **நீதி**, **நெறிமுறைகளை** அடிப்படையாகக் கொண்டில்லாத **கல்வியறிவு**, பரிபூரணமானதாக ஆகாது. **நேர்மை**, **பணிவு**, **நன்னடத்தை** ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட **கல்வியறிவு**, நமக்கு மட்டுமல்ல, நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் வழிகாட்டும் ஒளி விளக்காக அமையும்.

**மூன்றாவதாக: கல்வியறிவு உயிரோட்டமுள்ளதாகவும் வெற்றிமிக்க தாகவும் இருக்க வேண்டும்**

**கல்வியறிவு**, வெறும் செய்தியாக மட்டும் இருப்பது கூடாது; மாறாக, செயல்பாடுகள் மற்றும் **நடத்தைகள்** மூலம் அதை உயிரோட்டமுள்ளதாக ஆக்க வேண்டுமென இஸ்லாம் வழிகாட்டுகிறது. ஒருவர், தான் கற்றதை **நேர்மையாகச்** செயல்படுத்தும் போது, **அக்கல்வியறிவு** உண்மையான தாகவும், பொருள்மிக்கதாகவும், நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவதாகவும் அமையும். செயல்படுத்தப்படும் உயிரோட்டமுள்ள **கல்வியறிவு** தான், உள்ளங்களில் இடம் பிடித்து, அவற்றையும் உயிரோட்டமுள்ளவையாக ஆக்கும்.

**கல்வியறிவுகள்** பேசப்படுவதற்கு முன்பாக, அவை செயல்படுத்தப்பட வேண்டும்; அதுதான், **அக்கல்வியறிவுகளை** அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதற்கான ஆக்கப்பூர்வமான வழிமுறையாகும். மதிப்பீடுகள், ஓரிறை நம்பிக்கை, **நன்னடத்தை** ஆகியவற்றைத் தொடர்ந்து செயல்படுத்தப் படுவதானது, அறிவுறுத்துதலை விட ஆழமான, நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கும். எனவேதான், "செயல்படுத்தப்படும் கல்வியறிவு மற்றவர்களிடம் மிகச் சிறப்பாகச் சென்றடையும்" எனக் கூறப்படுகிறது.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

எவர்களின் **கல்வியறிவானது**, **நேர்மை**, **பணிவு** மற்றும் நேர்மையானச் செயல்களின் பால் அழைத்துச் செல்கின்றதோ அவர்களில் ஒருவராக நாம் ஆகுவோமாக! நமது **கல்வியறிவு**, நம்மை அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமாக ஆக்கி வைக்கட்டுமாக! அல்லாஹ்வைப் பற்றிய அச்சத்தையும், அவன் மீதான நமது அன்பையும் அதிகரிக்கட்டுமாக! நமது **நடத்தையைச்** சிறப்பாக்கி, நமது சமுதாயத்தின் நலனுக்காகப் பங்காற்றுபவர்களாக நம்மை ஆக்கட்டுமாக! எவர்கள், தாம் கற்றதின் பிரகாரம் செயல்பட்டார்களோ அவர்களில் ஒருவராக அல்லாஹ் நம்மை ஆக்கட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِينَ وَفِي كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا

رَبِّ العَالِمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمانَ لِلْعالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنا آتِنا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذابَ النَّارِ.

عِبادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبى، وَيَنْهى عَنِ الفَحْشَاءِ وَالمُنكرِ وَالبغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.